**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.210/2013**

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Deposition of Witness for** | | | **PW 2** | | |
| பெயர் | ° | பாபு | தொழில் | ° | Block Development Officer, West Arni |
| தந்தை பெயர் | ° | பெரிய குழந்தை | வயது | ° | 53 |
| கிராமம் | ° | நம்பேடு | | ° | |
| தாலுக்கா | ° | சேத்பட் | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2026. நேரம் - 2.50**

சாட்சியின் அடையாளம் - பணி அடையாள அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

மனு (IA 7/2025) அனுமதிக்கப்பட்டு சாட்சி அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு சாட்சி சாட்சியம் அளிக்க வந்துள்ளார்.

**முதல் விசாரணை**

முள்ளிப்பட்டு கிராமம், ஆரணி தாலுக்கா எங்களுடைய வரம்பிற்குட்பட்டுள்ளது. வாதி சிவக்குமரன் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எங்கள் அலுவலகத்தில் தகவல் கோரிய கடிதம் வா.சா.ஆ.18 ஆகும். வா.சா.ஆ.18ல் முள்ளிப்பட்டு ஊராட்சியில் பு.ச.எண் 129/3ஏ மற்றும் 129/3பி சம்மந்தப்பட்ட இடங்களில் மனைப் பிரிவு அங்கீகாரம் குறித்து உத்தரவு ஏதும் வழங்கப்படவில்லை என்று கண்டுள்ளது. கிராமத்தில் மனைப் பிரிவு அங்கீகாரம் செய்ய வேண்டும் என்றால் 05.01.2025 வரை தலைவருக்குதான் 2000 சதுர அடிக்குள் இருந்தால் அங்கீகாரம் வழங்க அதிகாரம் உண்டு. 2000 சதுர அடிக்கு மேல் இருந்தால் DTCP approval வேண்டும், அதன் பின்னிட்டு தலைவர் அங்கீகாரம் தர வேண்டும்.

2. 2000 சதுர அடிக்கு மேல் இருந்தால் தலைவருக்கு அங்கீகாரம் தர அதிகாரம் இல்லை. மனைப் பிரிவு அமைத்து அங்கீகாரம் பெறுவதற்கு சாலை,

தெரு விளக்கு, பூங்காவிற்கு இடம் ஓதுக்க வேண்டும். சாலைக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்றால் ஆணையாளருக்கு கிரைய பத்திரம் அல்லது தான பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும். பு.ச.எண் 129/3ஏ மற்றும் 129/3பி சம்மந்தப்பட்ட இடங்களில் மனைப் பிரிவு அமைப்பது சம்மந்தமாக ஆணையாளர் எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை.

3. மேற்படி 2 சர்வே எண்களில் மனைப்பிரிவு அமைக்க எங்கள் அலுவலகத்திலிருந்து எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. அதுப்போல் மனைப்பிரிவுகள் எங்கள் அலுவலக அனுமதியின்றி அமைக்கப்பட்டிருந்தால் அது சட்ட விரோதமானது.

**குறுக்கு விசாரணை** (பிரதிவாதி 5ம் தரப்பு)

வா.சா.ஆ.18ல் யாருடைய கையொப்பம் உள்ளது என்றால் ஊராட்சி செயலாளர் கையொப்பம் உள்ளது. ஊராட்சி செயலாளருக்கு தனி அலுவலகம் உள்ளதா என்றால் முள்ளிப்பட்டு ஊராட்சியில் உள்ளது. சாட்சி தன்னிச்சையாக ஒவ்வவொரு ஊராட்சிக்கும் தனி தனி அலுவலகம் உள்ளது என்று கூறினார். 2017ம் ஆண்டு நான் West Arniல் நான் பணி புரியவில்லை என்றால் சரிதான், அப்போது நான் சேத்பட்டில் பணி புரிந்து வந்தேன். பு.ச.எண் 129/3ஏ மற்றும் 129/3பி ஐ நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை.

2. 2017ம் ஆண்டிற்கு பிறகு மேற்படி சர்வே எண்களுக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். DTCP approval வாங்க வேண்டும் என்ற உத்தரவு எந்த வருடம் பிறப்பிக்கப்பட்டது என்றால் 2016ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டிருக்கும். DTCP approval 2016ம் ஆண்டிற்கு முன்பு வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18ல் உள்ள மனைகள் உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

3. மேற்படி சொத்திற்கான பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1990க்கு முன்னரே மேற்படி சர்வே எண்கள் மனைப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1990க்கு முன்னரே ஏற்பட்ட மனைப்பிரிவுகள் என்பதால் அவைக்கு DTCP approval பெற தேவையில்லை என்றால் எனக்கு தெரியாது.

5ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை முடிவடைந்தது.  மறு விசாரணை இல்லை.

**நேரம் - 3.10**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-  D.V.Koperundevi,
District  Munsif,
District Munsif Court,Arni